1971 டிசம்பர் 4]

(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவை நடந்து கொண்டிருக்கும்போது அதிகாரிகள் அவைக்குள் வருதல் குறித்து.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, சபை நடந்து கொண்டிருக்கும்பொழுது அரசாங்க அதிகாரிகள் சபைக்குள்ளே வந்து செல்லலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நடந்து கொண்டிருக்கும்பொழுது அதிகாரிகள் வருவது சரியல்ல. தவறுதலாக நடைபெற்றிருக்கிறது. அவர்கள் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி.

திரு. ந. நாச்சியப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் விற்பனை செய்ய உரிமை பெற்றவர்கள் நூற்றுக்கு இவ்வளவு சதவீதம் என்று கழிவுத் தொகை பெற்றுக்கொண்டும் கூட, மேற்கொண்டு, முத்திரைத் தாள்கள் வாங்கும் விவசாயி களிடமிருந்து 5 ரூபாய், 10 ரூபாய் என்று வாங்குகிறார்கள். எனவே அதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அப்படிப் பட்ட தவறுகள் ஏற்படாமல் இருக்கக்கூடிய வகையில் அதிகமாக முத்திரைத் தாள்கள் விற்பனை செய்கிறவர்களைப் போடக்கூடிய முறையை அரசாங்கம் கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி எங்காவது தவறு ஏற்பட்டால் கனம் உறுப்பினர் அவர்கள் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

காங்கேயம் பகுதியில் வைரக்கற்கள்

*81 வினா.—திரு. கோவை செழியன்

திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

காங்கேயத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறந்த வைரக்கற்கள் கிடைப்பதை ஆராய்ந்து நல்ல முறையில் பயன்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில புவியியல் பிரிவினாலும் இந்தியப் புவியியல் பிரிவினாலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. வைரக்கற்கள் இப்பகுதியில் கிடைப்பதாகத் தகவல் இல்லை. ஆனால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS